தூத்துக்குடி மாவட்டம்

T

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி தமிழ் மதிப்பெண்கள்: 50

### பகுதி - 1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×1=7

1) வானில் கரு ________ தோன்றினால் மழை பொழியும் என்பர்.
   அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்
2) இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________
   அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
3) தமிழ் எழுத்துச்சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ________
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
   இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
4) பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ________
   அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது
5) பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ________
   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர்
   இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
6) 'நன்செய்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) நன்+செய் ஆ) நன்று+செய் இ) நன்மை+செய் ஈ) நல்+செய்
7) பால்+ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
   அ) பால்ஊறும் ஆ) பாலூறும் இ) பால்லூறும் ஈ) பாஊறும்

### பகுதி - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
(வினா எண். 14க்குக் கட்டாயமாக விடையளிக்க) 5×2=10

8) உலகம் எவற்றால் ஆனது?
9) ஓடை எவ்வாறு ஒடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
10) ஓவிய எழுத்து என்றால் என்ன?
11) விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
12) வினைமுற்று என்றால் என்ன?
13) எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
14) 'தக்கார்' எனத் தொடங்கும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பகுதி - 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 3×2=6

15) ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.
   அ) படி ஆ) ஆறு
16) கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.
   அ) கடமையைச் செய் ஆ) நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்?
17) அடிக்கோடிட்ட எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.
   அ) உலக இயற்கை நாள் அக்டோபர் 3 ______
   ஆ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16 ______

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



18) சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) சோறு ______ (தின்/உண்) ஆ) பால் ______ (பருகு/குடி)

19) கலைச்சொல் தருக: அ) Ridge ஆ) Consonant

பகுதி - 4

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
(வினா எண். 24க்குக் கட்டாயமாக விடையளிக்க) 3×3=9

20) தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

21) புயல்காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

22) கீழ்க்காணும் பத்தியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்குவது மழை. மழை பொய்த்துவிட்டால் நீர்நிலைகளும் வற்றிவிடும். நாட்டில் பசியும், பஞ்சமும் தலைவிரித்தாடும். அத்தகைய காலங்களில் மழை வேண்டி மக்கள் வழிபாடு செய்வர்.

வினாக்கள்

1. ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்குவது எது?
2. நீர்நிலைகள் எப்போது வற்றிவிடும்?
3. மக்கள் எதற்காக வழிபாடு செய்வர்?

23) ஏவல்வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

24) 'வாழ்க நிரந்தரம்........ இசைகொண்டு வாழியவே' எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பகுதி - 5

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 2×5=10

25) அ) ஐம்பூதங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் வேறு இருபெயர்களை எழுதுக. (அல்லது)

ஆ) இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

26) அ) உவமை அணியினைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

பகுதி - 6

ஏதேனும் ஒன்றினுக்கு விரிவான விடையளிக்கவும்:- 1×8=8

27) அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. (அல்லது)

ஆ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com